RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சுந்தரர் தேவாரத்தில் சூழலியல் உணவுகள்

ந. கீதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-20, தமிழ்நாடு, இந்தியா.

# Ecological foods at Sundarar Thevaram

**N. Geetha [a, *]**

[a] Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore-641020, Tamil Nadu, India

* Corresponding Author: ngeetha@gmail.com

Received: 03-04-2024
Revised: 23-06-2024
Accepted: 01-07-2024
Published: 02-08-2024

Check for updates

**ABSTRACT**

The seventh of the twelve Thirumurai is called Tiruppattu. It was blessed by Sundarar. The Saiva Kuravas were in the habit of singing the praises of the holy places where Lord Shiva was seated and the splendor of the holy place. The specialities of the temple in this manner of singing include Thirumeni, water (theertham) and sacred trees. The geology of the place sung in it includes the agricultural products eaten by man, natural botanicals and some of them are bathing objects and offerings to Lord Shiva. It is a matter of research to find out how such ecological food items are recorded in the Sundarar Pathigams and how they have scientific background that are beneficial to the human body.

**Keywords:** Sundarar, Tirukkolili puranam, Sennel, Panangali, Carotene, Kathali

## முன்னுரை

மானிட சமுதாயம் காலந்தோறும் உணவிற்காக பல இயற்கைசார் சூழல்களை இடம் விட்டு இடம் நகர்ந்து வாழ்ந்துள்ளது. கிடைக்கும் உணவுகளைத் தேடிப் பசியாறி வாழத்தொடங்கிய காலத்து தாமே அவற்றை வளர்த்து மரக்கறி உணவு உண்ணும் நிலைக்கு தன் அறிவாற்றலைப் பெருக்கிக் கொண்டது. நிலத்தைப் பக்குவப்படுத்தி வேளாண் தொழில் செய்து நானிலங்களில் தங்கி வாழ்ந்த மனித குலம் தன்னை பக்தி நெறியிக்கு மெல்ல நகர்த்திக் கொண்டது. பக்திக்குள் சமயங்கள் கால் பதிக்கத் தொடங்கியதும் பூசனைகள் தொடக்கம் பெற்றன. அவ்வழிபாடுகின்ற செய்கின்ற பூசனைகளுக்குள் மண்ணில் இயற்கையாக விளைந்த நீரும், உண்ணும் உணவுப் பொருட்கள் முதலிய பலவும் இடம்பெற்றன. சமய அழுத்தங்களின் வழியே உண்ணும் உணவுகளில் இது உகந்தது? இது உண்ணத்தகாதது? என்ற தருக்கச் சிந்தனைகளும் பிறந்தன.

காலப்போக்கினில் இறைவனைத் துதிபாடும் பாடல்கள் வளரத்தொடங்கிய நிலையில் இத்தகைய மரக்கறி உணவுகள் பற்றிய கருத்தாங்கள் வலுப்பெறத் தொடங்கின. கடவுளரை மட்டுமே துதிபாட வேண்டும் நியதிக்குள் கட்டுப்படாமல் இயற்கையினையும் சேர்த்துப் பாடும் சிந்தனைகள் மலர்ந்தன. இதன் அடிப்படையில் சமய அருளாளர்கள் அவ்விடச் செழுமை கண்டும், அந்நிலப் பொருளைக் கண்டும் களிப்பினால் இயற்கையுடன் இணைத்து கடவுளை மனங்குளிரப் பாடினார்கள். அது மட்டுமல்லாது அத்தலத்தில் கிடைக்கும் நிலவியல் சார் சூழலியல் உணவுகள் பற்றி சிறப்புகளைப் பக்தி பனுவல்களில் இடம் பெறச் செய்தனர் என்பதே இங்கு உணர்ந்து கொள்ளும் செய்தியாகும். இத்தகைய

மரபு பண்டைய சங்கத் தமிழனிடத்து இருந்து வந்தென்பதை மறுக்கவியலாது. சங்க இலக்கியங்கள் போலவே பக்தி இலக்கியங்களும் மக்களின் பண்பாட்டு உணவு சார் வேளாண் சூழல்களைப் பதிவிடும் இலக்கியங்களாக விளங்குகின்றன. இந்நிலையில் தேவாரம் பாடிய சுந்தரர் சிவபெருமான் அமர்ந்த தேவாரத் தலங்கள் தோறும் சென்று புகழ்ப் பாக்கள் பாடியதுடன், அவ்விடத்தினில் விளையும் பொருட்களையும், நிலவியல் தோற்றங்களையும் அப்படியே பதிவு செய்யும் எதார்த்த சூழலியலாளராக தம்மை முன்னிருத்திக் கொள்கிறார். எனவே தான் அவர்தம் பாடல்களில் காணப்படும் உணவியல்சார் இருப்பும் அவற்றின் மீதான அறிவியல் பார்வையும் ஆய்வுக் களனாகிறது.

## நீராட்டுப் பொருள்கள்

சுந்தரர் பாடிய எழாம் திருமுறை உணவு தானியங்களான நெல்,வரகு, காய், கனிகள் பற்றிய செய்திகளை மிகுதியாக எடுத்துக் கூறுகின்றன. மேலும் இந்த இடத்தில் (திருத்தலங்களில்) இன்னின்ன் பயிர்களும், பொருட்களும் விளைந்துள்ளதென்பதே சுந்தரர் திருப்பாட்டு தரும் செய்திகளாகும். இத்தகைய அருஞ்செய்திகளை தேவாரம் பாடிய சமயக்குரவர்களின் பதிகங்களாலும் தெளியாலாம்.

சைவ இலக்கியங்கள் நீர் முதலான திரவியங்கள், உண்ணத் தகுந்த மரக்கறி உணவுகள் பலதும் சிவபெருமானை நீராட்டும் பொருட்களாகப் பட்டியலிடுகின்றன. பால், தயிர், நெய், தேன் முதலானப் பொருட்களால் நீராட்டி வழிபாடு செய்ய வேண்டும் என்பதைப் சுந்தரர் தமது பதிகங்களில் எல்லா இடங்களிலும் எடுத்துச் சொல்லுகின்றார். இதனை,

“மடை எலாம் கழுநீர் மலர்ந்து மருங்கு எலாம் கரும்பு ஆடத் தேன்

புடை எலாம் மணம் நாறு சோலைப் புறம் பயம் தொழப் போதுமே“ (பதி.30.பா.6)

“தேனை ஆடிய கொன்றையினானை” (பதிக.37:8),

“தேனை ஆடு முக்கண்ணரோ மிகச்செய்யரோ வெள்ளை நீற்றரோ

பால்நெய் ஆடலும் பயில்வரோ தமைப் பற்றினார்கட்கு நல்லரோ” (பதி.42.பா.4)

“நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசை செய்யலுற்றார் (பதி.60.பா.1)

மேற்சுட்டியப் பொருட்கள் சிவபொருமான் மகிழ்ந்து நீராடியவை எனக்குறிப்பிடுகிறார். பால், தயிர் முதலானப் பொருட்கள் உண்ணத் தகுந்த உணவுகளில் முக்கிய இடம் கொண்டவைகளாகும். உடலுக்கு நன்மை தருவன பால், தயிர்,நெய், தேன் என்பதைத் தெரிந்தே அதை வழிபாட்டுப்பொருட்களில் இடம் பெறச் செய்து அவற்றை உண்டு வாழ்ந்து வருகின்றோம்.

இன்றைக்கும் சிவாலய வழிபாட்டின் நிறைவில் ஈசனுக்கு நீராட்டு செய்வித்த தேன் கலந்த பால் பருகத் தருகின்றனர். அதனோடு கதலி முதலிய பழக்கலவைகளும் இடம்பெறுகின்றன. இவ்வகை உணவுகள் சத்துக்கள் நிறைந்தவையாகும். கொழுப்புள்ள பாலில் குளோபுல்ஸ், புரதம் (கேசீன்) மற்றும் கூழ் நிலையில் உள்ள சில கனிம பொருட்கள் மற்றும் லாக்டோஸ் ஆகியவற்றுடன் சில தாதுக்கள் மற்றும் கரையக்கூடிய மோர் புரதங்கள் உள்ளன. பழங்களில் உடலுக்குப் புத்துணர்ச்சி தரும் வைட்டமின்களும் ஆற்றல் தரும் உயிர் சத்திகளும் அடங்கும். எனவே தான் மக்கள் நல் வாழ்விற்கென்று இத்தகைய வழிபாட்டுமுறைகளை தமிழ்ச் சமுதாயம் தொடர்ச்சியாக கட்டிக்காக்கின்றது.

## செந்நெல்லும் திருத்தலமும்

சுந்தரர் பாடல்களில் மிகுதியாகப் பேசப்படும் உணவுத் தானியங்களில் ஒன்று செந்நெல்லாகும். தமிழன் செந்நெல்லின் மிகுந்த நன்மைகளைத் தெரிந்து வைத்திருக்கின்றான். இடைப்பட்ட காலத்தில் சமூகம் பட்டை தீட்டிய அரிசி உணவுகளை உட்கொண்டதன் பயனாய் நோய் பெருகியதும், மீண்டும் சிவந்த செந்நெல்லின் பக்கம் தன் கருத்தினை செலுவத்தனைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

செந்நெல்லின் சிறப்புணர்ந்த சுந்தார் அவ்விடப்பெயரை மறவாமல் குறிப்பிடுவதை,

"செந்நெல் ஆர் வயல் திருத் திணை நகருள்

சிவக் கொழுந்தினைச் சென்று அடை மனனே..," (பதி.4.பா.7)

"செந்நெல் நெருங்கிய கழனிக்

கழுமல வளநகர் கண்டுகொண்டேனே" (பதி.5.பா.6)

"செந்நெல் அங்கு அலங் கழனித் திகழ் திரு வாங்கியத்து..," (பதி.15.பா.10)

பாடல்கள் வழிக்காணலாம். திருத்தலங்களின் பெயர்களை ஊர் பெயராய்வு செய்து ஆராய்ந்து பார்க்கின் தானிய பெயர்களை அடைமொழியாக கொண்டு விளங்கும் திருப்பெயர்களைக் காணலாம். சான்றாக, திருச்சோற்றுத்துறை, அரிசிற்கரைப்புதூர், (புகழ்த்துணை நாயனார் பசிப்பிணியால் வருந்தியவருக்குச் சோறிட ஈசன் தினமொரு படிக்காசு அருளிய திருத்தலம்), திருத்திளை ஆகிய ஊர்களைச் சுட்டலாம்.

## திருக்கோளிலியும் செந்நெல் புராணமும்

சுந்தரரிடம் அளவற்ற அன்புடையவரான குண்டையூர்க்கிழார் சுந்தரர் இல்லத்திற்கு நெல், பருப்பு முதலிய உணவுப்பொருள்களைத் தொடர்ந்து கொடுத்து வந்தார். மழையின்மை காரணாமாக அவற்றை கொடுக்க முடியாமல் கிழார் வருந்தினார். ஓர் இரவில் உண்ணாமல் வருத்தமுற்று உறங்கிய கிழாரின் கனவில் தோன்றிய சிவபெருமான் குண்டையூர் முழுவதும் செந்நெல் குவித்து அருளினார். திருவமுது படைத்தருள அவற்றை திருவாரூருக்கு எடுத்துச் செல்ல இயலாத நிலையில் குண்டையூர் கிழார் சுந்தரரிடம் தெரிவிக்க ஈசன் அருளிய திருநெல்லை எடுத்துச் செல்ல திருக்கோளிலி பெருமான் திருவருள் வேண்டிப் பதிகம் பாடினார். அதனை,

"கோளிலி எம்பெருமான் குண்டையூரச் சில நெல்லுப் பெற்றேன்

ஆள் இலை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே.." (பதி.8.பா.1)

திருக்கோளிலித் திருத்தலத்தில் பாடி பதிவு செய்துள்ளார். அடியார்களுக்காக செந்நெல் அருளிய திறமே செந்நெல் சிறப்புணர்த்துவதாகும். முக்கூடற்பள்ளு 150 வகையான நெல் வகைகள் இருந்துள்ளதைக் குறப்பிடுகிறது. இருங்கலரிசி வெண்ணலரிசி, தோரை நெல், செஞ்சாலி நெல், முடந்தை, மூங்கில் அரிசி, மழைநெல், வெதில் நெல், கருட சம்பா, கொழில் அரிசி போன்ற பல வகையான நெல்கள் இருந்துள்ளதைச் சான்று காட்டுகிறது. சங்க கால மக்கள் முதலாக இன்றளவும் அரிசியைவிட சிறுதானியங்களை மக்கள் அதிகம் விரும்புகின்றனர் என்பது தெளிவாகின்றது.

## கரும்பும் வாழையும்

நெல் போலவே கரும்பும் வாழையும் சுந்தரர் பாடல் மிகுதியாக இடம்பெற்றவையாகும். பல திருத்தலங்கள் அங்கு விளைந்த பொருட்களால் சிறப்படைகின்றன. திருகழுமலம் எனும் திருத்தலம் இத்தகைய சிறப்பு பெற்று விளங்குதலை சுந்தரர் தம் 5ஆம் பதிகம் எடுத்துரைக்கிறது. இதை தாமே நேரில் கண்டு வியந்து,

"கனிவு இனிய கதலிவனம் தழுவு பொழில் சோலைக்," (பதி.38.பா.9)

"வாழை காய்க்கும் வளர் மருகல் நாட்டு மருகலே..," (பதி.92.பா.1)

"குழகா வாழைக் குலை தெங்கு..," (பதி.94.பா.4)

"கழைக்கரும்பும் கதலிப் பலசோலைக்

கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே..." (பதி.5.பா.6)

என்று பாடுகின்றார். கதலி, குழகா வாழை, கருந்தாளி வாழை' போன்ற வாழை ரகங்களை சுந்தரர் நிரல்படுத்துக்கூறுகிறார். கரிய நிறமுடைய வாழை என்பது செவ்வாழை. வாழை மரத்தின் மேற்புரம் கருமை, நன்கு முற்றி காய் தோற் கருஞ்சிவப்பில் காணப்படும் செவ்வாழை. செவ்வாழை (வாழை மரத்தின் மேற்புரம் கருமை) தொற்றுநோய் கிருமிகளை கொல்லும் அரிய சக்தி செவ்வாழைப் பழத்திற்கு உண்டு. வாரம் ஒரு முறை செவ்வாழை சாப்பிட்டு வந்தால் உடலில் தொற்று நோய் பாதிப்பு கட்டுப்படும். தினமும் இரவு உணவிற்கு முன்னர் சாப்பிட்டு வந்தால் நல்ல ஜீரணசக்தி உண்டாகும். மேலும் பழம் கல்லீரல் வீக்கம், சிறுநீர் கோளாறை சீராக்கும் சக்தி கொண்டது என்கிறது மருத்துவ உலகம்.

## கனியும் கமுகும்

திருவாரூர் சிறப்பினை பாடும் சுந்தரர் பனம்பழம் ஆரூர் பெருமானுக்குப் படைக்கப்பட்டதை எடுத்துரைக்கிறார். இதனை,

"தெங்கொடு பனை பழம் படும் இடந்தேவர்கள்..," (பதி.46.பா.4)

பசிய நிறமுடைய பனங்காய் முற்றியதும் கருநிறத்தில் செம்மஞ்சள் நிறப் பழமாக மாறும். இது *பனங்களி* எனப்படுகின்றது. ஏனைய பழங்களைப் போல் இப்பழத்தை நேரடியாக உட்கொள்வதில்லை. இதனை நெருப்பில் சுட்டே உண்பது வழக்கம். நெருப்பில் சுட்ட இப் பழத்தின் தோலை உரித்து எடுத்தபின், களியைப் பிழிந்து உண்பார்கள். இக்கனி கசப்புக் கலந்த இனிப்புத் தன்மை கொண்டது. இக்கனியைப் பிழிந்து பாய்களில் விரித்து வெயிலில் காயவிட்டுப் பெறப்படுவது "பனாட்டு" எனப்படுகிறது. இது நீண்ட காலம் வைத்தும் உண்ணலாம். வைட்டமின் சி மற்றும் கால்சியம் கொண்ட பனம் பழச்சாற்றில் நீர்ச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்து, உலோக உப்புகள், சர்க்கரை வைட்டமின் சி மற்றும் கரோட்டின் ஆகியவை நிறைந்து காணப்படுகிறது. குறிப்பாக, பார்வைத் திறனை அதிகரிக்கும் வைட்டமின் ஏ சத்து இந்தப் பழத்தில் அதிக அளவில் உண்டென்பதே மருத்துவ உலகம் தரும் செய்தியாகும்.

## முடிவுரை

திருப்பாட்டு எனும் ஏழாம் திருமுறையில் இடம் பெறுகின்ற இத்தகைய உணவு மற்றும் வேளாண்மை சார்ந்த பொருட்கள் அனைத்தும் சுந்தரரால் களாய்வு செய்து திரப்பட்ட தரவுகள் ஆகும். இவை தமிழ்ச் சமுதாயத்திற்கு சுந்தரர் கொடுத்த விலைமதிப்பற்ற சொத்தாகும். வேளாண்மை சிறப்புற்ற விளங்கிய தமிழகத்தின் அன்றைய நிலையையே திருமுறைப் பதிகங்கள் காட்டுகின்றன. பால், தயிர், நெய், தேன், கரும்பு, வாழை, கனிகள், நெல் , வயல், பழனம், முலான உணவியல் சார் பதிவுகள் ஏழாம் திருமுறையில் சிறப்பிடம் பெறுகின்றன. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே அன்றைக்கு சமய அருளாளர்கள் மேற்கொண்ட இறைப்பணி என்பது தெளிவு.

## References

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், சைவ நூல் அறக்கட்டளை, மவுண்ட்ரோடு, சென்னை.02, (நான்காம் பதிப்பு.2010)

சுந்தரர் தேவாரம் முதல் பகுதி, புலவர் பி.ரா. நடராசன்(உரை), உமா பதிப்பகம், சென்னை 1, (முதற்பதிப்பு அக்டோபர் 2004)

முக்கூடற் பள்ளு, கழக வெளியீடு, சென்னை- 02, (மூன்றாம் பதிப்பு 2002)

பன்னிரு திருமுறை வரலாறு, பேராசிரியர் க. வெள்ளைவாரனர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், தமிழ்நூல் வெளியீடு, 1994 மறுபதிப்பு.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License